உ

கடவுள் துணை.

# தென்னிந்தியா றெயில்வே
# என்னும்
# கர்நாடகப் புகைவண்டியின் சிந்து.

---

திருப்போரூர்

## டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதறாஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி, மதறாஸ், என். சி.

# விளம்பரம்.

## அற்புத பூலோகரம்பை கதை.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக் கதை, பாரீசுகதை, குலோபகாவலிகதை நான்கு பக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் செலக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரங்கதைகளை ஒன்று ய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது ஏற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவது மன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச்செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகா அற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேசுகாகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா 1 0 0

உ

கடவுள் துணை.

# தென்னிந்தியா றெயில்வே

என்னும்

# கர்ணாடகப்புகைவண்டியின்சிந்து

——(*)——

தென்னிந்தியா றெயில்பாரடி - பெண்ணேயிது
தெற்கேபோகும் நேரடி.

மன்னர்கள்தான் துதிக்கும் மதிராஸ்க்கருகாக
உன்னிதமாகவே யுகமையாயேற்பட்ட — தெ

மண்டலத்தோர்புகழும் மதிறாஸ் எழும்பூரினில்
கண்டவர்வியப்படையக் கருதிநியமித்த — தெ

சட்டமுடன்ஸ்டேஷன் பட்டணத்தோர்போற்ற
திட்டமதாகவே கட்டியிருக்கிற — தெ

கண்ணாடிக்கதவுகள் கனத்தஆபீசுகள்
விண்ணாடரும்மெச்ச விதமாகயேற்பட்ட — தெ

கைக்காட்டிமரங்களும் கனத்த ஆளுகளும்
பைகாட்சினேகர்முதல் பலருமிருக்கிற — தெ

இஞ்சின்வண்டிமுதல் இணையில்லாவண்டிகள்
அஞ்சுதலில்லாமல் தங்கியிருக்கின்ற — தெ

டிக்கட்டுகள்வாங்கி இக்கட்டில்லாமலே
பக்குவமாகவே தக்கபடிபோவோம் — தெ

சைதாபேட்டைஸ்டேஷன் சார்ந்தபரங்கிமலை
பயிலாகிறெயில்வண்டி பார்மீதிலேபோகும் — தெ

பல்லாவரம்பாரு பக்கத்தில்வண்டலூரு
எல்லார்தங்குங்கூடு வாஞ்சேரியிதுபாரு — தெ

அங்கமதுயிடேற ஆண்டவனைப்போற்றும்
சிங்கபெருமாள்கோயில் ஸ்டேஷனிதுபாரடி — தெ

தங்கபிளப்பாறி தாகவிடாய்தீர
செங்கற்பட்டுஸ்டேஷன் சிறப்பதாய்நாம்வந்தோம் — தெ

கோர்ட்டுமுதலான தூக்குமரங்களும்
மெட்டிமையாய்ச்செயில் தாட்டியாய்த்தோற்றது — தெ

பொன்விளைந்தகளத்தூரு புகலரியமதுராந்தகம்
தன்மையுள்ளதாசில்தார் நடத்துங்கச்சேரி — தெ

அச்சரவாக்கமிது அடர்ந்துவரும்றெயில்வண்டி
இச்சையுடன்மாற்றும் இணையில்லாஸ்டேஷனிது — தெ

ஒலக்கூறுதாண்டிநாம் ஒயிலானதிண்டிவனம்
கலக்கமிலாத்தாலுக்கா கட்டழகிவந்தோம்பார் — தெ

புதுமையுள்ளசத்திரத்தில் போஜனநாம்செய்து
இதமுடன்றெயிலேறி இக்ஷணம்போகலாம் தெ

மாநிலந்தான்புகழும் மயிலமெனுந்தலத்தில்
கானமயில்மீதேறும் கர்த்தனிருக்கிறார் தெ

கண்டுபணிந்தால் கர்மவினைகள்போகும்
வண்டுநிகர்விழியாளே மாங்குயில்மொழியாளே தெ

விக்கிரவாண்டி விழுப்புரந்தாண்டி
பக்கத்திலேபண்ருட்டி பண்புள்ளஸ்டேஷனிது தெ

நெல்லிக்குப்பமெனும் நேரானவூரிது
அல்லலகற்றுந்திருப் பாதிருப்புலியூரிது தெ

பேடைமயிற்கண்ணாளே பிரியாதேசெந்தேனே
கூடலூர்ஸ்டேஷனைக் குறிப்பாகபாரு தெ

ஆலப்பாக்கமிது அடுத்தபரங்கிப்பேட்டை
கோலமுள்ளகாயலார் குடிகளிருக்கிறார் தெ

பார்தனிலுள்ளோர்கள் பத்தியாய்தான்துதிக்கும்
சீருள்ளசிதம்பரத் தெரிசனஞ்செய்யடி தெ

நடராஜர்வீற்றிருக்கும் நலமானசிற்சபையை
மடமயிலேநீயும் மனதினிற்போற்றடி தெ

தொல்லைவினைகளைத் துரத்திகருவறுக்கும்
தில்லைமாகாளியின் தெரிசனஞ்செய்யடி தெ

கனிவர்க்கங்களுண்டு க்ராசாலட்டுமுண்டு
இனிமைப்பிரசாதங்க ளிருக்குமிடமுண்டு தெ

வல்வினையைத்தீர்க்கும் வயிதீஸ்வரன்கோயில்
எல்லேயைவிட்டுமகா வேகமாய்த்தான்போகும் தெ

மாயவரங்குத்தாலங் வயங்நரசிங்கபேட்டை
தூயஸ்டேஷன்கள்தாண்டி துரிதமாப்போகும் தெ

திருவிடைமருதூர் தேன்பொழியுங்கும்பகோணம்
பருவுஞ்செந்தலைப்பேரு வந்தோமிப்போதடி தெ

பாவவினாசனம் பகரும்ஐயம்பேட்டை
கோபமதைநீக்குஞ் சொகுசுள்ளதஞ்சாவூர் தெ

முப்பத்திரண்டும் முதன்மையாய்ச்செய்வித்த
தப்பில்லாபோஜராஜன் தங்கியதஞ்சாவூர் தெ

சாலியமங்கலம் சார்ந்தஅம்மாம்பேட்டை
நீடாமங்கலமிது நேர்ந்தகொரடச்சேரி தெ

குளிக்கரைஸ்டேஷனிது குணமுள்ளதிருவாரூர்
களிக்கவேதியாகரைக் கண்டுதெரிசிப்போம் தெ

இத்தலந்தன்னிலே யிணையில்லாதேருகள்
மெத்தவுசித்தமாக மேன்மையாய்த்தோற்றுது தெ

அப்புரமிருக்கும் அடைவானஸ்டேஷன்களை
தப்பிதமில்லாமல் தன்மையுடன்சொல்வேன் தெ

கீவளூர்தானிது கிளர்சிக்கல்தானிது
மேவிநாகப்பட்டணம் மேன்மையுடன்வந்தோம் தெ

இடமுள்ளதிருச்சினுப்பள்ளி ஸ்டேஷனிது
வடமேற்குறெயில்பாதை வந்துகலக்கும்பாரு தெ

பிட்டுக்குமண்சுமந்து பிரம்பாலடிபட்ட
இட்டமுள்ளசொக்கநாதர் திருமதுரைதலமிது தெ

அங்கயற்கண்மீனுட்சி யம்மனிருக்கிற
சங்கைகளில்லாத சன்னிதியிற்கோறு தெ

திருப்பரங்குன்றம் திருமாநகரம்
விருப்பமுள்ளபள்ளுகுடி விருதுபட்டிஸ்டேஷன் தெ

துலுக்கப்பட்டிசாத்தூர் கோவில்பட்டிகுமரிபுரம்
தொடர்ந்துவரும்ஸ்டேஷன் தருசாய்ப்போகும்இஞ்சின்

கண்டவர்வியப்படையுங் கடம்பூருஸ்டேஷனிது
அண்டையிலிருக்கு மணியாச்சிசத்திரமிது தெ

செங்கைகுண்டாதாண்டி சிறப்பானறெயில்வண்டி
விங்தைமிகும்திருநெல் வேலியிதோவந்தோம் தெ

எத்தும்திட்டப்பாறை நேத்தியாய்நாம்வந்து
தூத்துக்குடிதலை தூரமேநாம்வந்தோம் தெ

தேசமெங்கும்புகழ் திருவண்ணாமலையில்வாழ்
பாசமுடன்வீர பத்திரனியம்பிய தென்னிந்தியா

தென்னிந்தியா றெயில்வே சிந்து

முற்றிற்று.



தில்லை நடராஜர்.